# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## திருத்தம்

## கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களம்

## காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்தவற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2026

2026 ஆம் ஆண்டு யூன் மாதம் 26 ஆந் திகதிய 2,495 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட "காணி ஆணையாளர் நாயகம் திணைக்களத்தின் மேற்பார்வை முகாமைத்துவ உதவித் தொழில்நுட்ப சேவை வகுதியைச் சேர்ந்த குடியேற்ற உத்தியோகத்தர் பதவியின் III ஆம் தரத்திற்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பு செய்வதற்கான திறந்த போட்டிப்பரீட்சை - 2026" எனும் பரீட்சை அறிவித்தலின் 02 ஆம் மற்றும் 04 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டவாறு பின்வருமாறு திருத்தப்படுகின்றன.

02. **தகைமைகள் :**

I. **கல்வித் தகைமைகள் :** உயிரியல் (Biology), இரசாயனவியல் (Chemistry), பௌதிகவியல் (Physics), விவசாய விஞ்ஞானம் (Agricultural Science), விவசாய தொழில் நுட்பவியல் (Agro Technology) உயிரியல் முறைமைகள் தொழிநுட்பவியல் (Biosystems Technology ) மற்றும் தொழிநுட்ப வியலுக்கான விஞ்ஞானம் (Science for Technology) ஆகிய பாடங்களில் ஏதேனும் மூன்று (03) பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (உயர் தர)ப் பரீட்சையில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

மற்றும்

சிங்களம்/தமிழ்/ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் மேலும் ஒரு பாடத்தில் விசேட (சாதாரண) சித்தியுடன் ஒரே அமர்வில் ஆறு (06) பாடங்களில் கல்விப் பொதுத் தராதரப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

04. **வயது எல்லை :**

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியன்று 18 வயதுக்கு குறையாமலும் 35 வருடங்களுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதற்கமைய 2008.10.02 ஆம் திகதியிலோ அல்லது அதற்கு முன்னரோ மற்றும் 1991.10.02 ஆம் திகதியிலோ அல்லது அதன் பின்னரோ பிறந்த திகதியை உடையவர்களுக்கு மாத்திரமே இதற்காக விண்ணப்பிக்கத் தகைமையுண்டு).

மேலும் இப்பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்ப்படுவதற்குத் தேவையான சகல தகைமைகளும், 2026, யூன் மாதம் 26 ஆந் திகதிய 2,495 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள 2026.07.31 ஆந் திகதியில் அனைத்து விதத்திலும் பூர்த்தி செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி - 2026, நவெம்பர் 02

மேற்குறிப்பிட்ட திருத்தங்கள் தவிர்ந்து, அவ்வர்த்த மானிப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஏனைய அனைத்து விடயங்களும் மாற்றமின்றிச் செல்லுபடி யாகும். (2.495 ஆம் இலக்க 2026, யூன் மாதம் 26 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமான அறிவித்தலின் பிரகாரம் ஏற்கனவே விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகள் மீண்டும் விண்ணப்பிக்கத் தேவையில்லை).

சந்தன ரணவீர ஆரச்சி,
காணி ஆணையாளர் நாயகம்.
காணி ஆணையாளர் திணைக்களம்.

1200/6, மிஹிகத மெதுர,
ரஜமல்வத்த வீதி,
பத்தரமுல்ல,
2026, செத்தெம்பர் 28.

10- 408

Gazette.lk SINCE 2014 AMBITIONS REALIZED